# கலந்துரையாடலிருந்து செயற்பாட்டினை நோக்கி: இலங்கையின் தேர்தற் சீர்திருத்தத்திற்கான விதந்துரைகளும் உபாயங்களும்



சுதந்திர மற்றும் நேர்மையான தேர்தலுக்கான மக்களின் செயற்பாடு **(PAFFREL)**
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் **(CMEV)**

# கலந்துரையாடலிருந்து செயற்பாட்டினை நோக்கி: இலங்கையின் தேர்தற் சீர்திருத்தத்திற்கான விதந்துரைகளும் உபாயங்களும்

சுதந்திர மற்றும் நேர்மையான தேர்தலுக்கான மக்களின் செயற்பாடு (PAFFREL)
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV)
மற்றும் மாற்றுக் கொள்கைக்கான நிலையம் (CPA)

அனுசரணை:
சர்வதேச விவகாரங்களுக்கான தேசிய ஜனநாயக நிறுவகம் **(NDI)**
நிதிஉதவி:
சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரகம் **(USAID)**

சகல உரிமைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது
© தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV)
© சுதந்திர மற்றும் நேர்மையான தேர்தலுக்கான மக்களின் செயற்பாடு (PAFFREL)

CMEV மற்றும் PAFFREL இற்கு உரிய நன்றி அறியத்தருதலுடன் இவ் வெளியீட்டில் கூறப்பட்டுள்ள விடயங்கள் பயன்படுத்தப்படலாம்.

ISBN 955-8037-75-3

டிசெம்பர் 2004

# பொருளடக்கம்

**அறிமுகம் ............................................................................4**

**வரலாற்று மற்றும் அரசியற் பின்னணி .......................................................5**

**கலந்தாலோசனைச் செயன்முறை .............................................................6**

*சீர்திருத்தத்திற்கான விதந்துரைகள்.........................................................6*

*சீர்திருத்தத்தினைச் செயற்படுத்துவதற்கான உபாயங்கள் ...................................7*

**தேர்தற் சீர்திருத்தத்திற்கான விதந்துரைகள்...............................................8**

*தேர்தற் சீர்திருத்தங்கள் ..................................................................9*

*கட்சிகளும் அபேட்சகர்களும் ..............................................................11*

*பெண்களும் ஏனைய குறைந்தளவில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் குழுக்களும்......11*

*வாக்களிப்பும் தேர்தல்களும் ..............................................................12*

*ஊடகங்கள்...................................................................................13*

அரசியலமைப்பு சீர்திருத்தம்....................................................................*13*

**செயற்படுத்துவதற்கான உபாயங்கள்.....................................................18**

*எதிர்கால பிரச்சார உபாயங்கள் ...........................................................19*

**முடிவுரை...................................................................................20**

இவ் வெளியீடு வெளிவருவதற்கு இல 386-A-00-04-00042 உடன்படிக்கையின் கீழ் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் முகவர் நிலையத்தால் (USAID) வழங்கப்பட்ட ஆதரவு மூலமாக சர்வதேச விவகாரத்திற்கான தேசிய ஜனநாய நிறுவனம் (NDI) வழங்கிய உதவி காரணமாக அமைந்துள்ளது. இங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் ஆசிரியர்களின் கருத்தேயன்றி (USAID) அல்லது (NDI) ஆகியவற்றின் கருத்தினை முற்றாகப் பிரதிபலிப்பதாகக் கெள்ள முடியாது.

## அறிமுகம்

ஜனநாயக சமூகமொன்று கட்டியெழுப்பப்படுவதற்கு நீதியானதும், வெளிப்படையானதுமான தேர்தல் முறைமை அத்திவாரமாக அமைகின்றது. வன்முறை அல்லது பயமுறுத்தல் இன்றி இடம்பெறும் தேர்தலானது பிரஜைகள் சனநாயக முறையில் பங்குபற்றுதலை வலுப்படுத்துவதுடன் அவர்களின் விருப்பத்தினை தேர்தல் பிரதிபலிக்கின்றது. இலங்கையில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற தேர்தல்கள் சுதந்திரமானதும் நீதியானதும் என உள்ளூர் மற்றும் சர்வதேசக் கண்காணிப்பாளர்களால் மதிக்கப்பட்ட போதிலும் இன்னும் தேர்தல் முறையானது பல விடயங்களில் மாற்றத்தை வேண்டி நிற்கின்றது. பெண்கள் இன்னும் அரசியலில் குறைந்தளவு பிரதிநிதித்துவத்தையே கொண்டுள்ளனர். தோல்வியுற்ற அபேட்சகர்கள் தேசியப்பட்டியல் மூலமாக பாராளுமன்ற அங்கத்தவர்களாக வருகின்றனர். வெளிநாட்டில் தொழில் புரியும் ஆயிரக் கணக்கானோர் வாக்குரிமையை இழந்துள்ளனர். அரசியல் யாப்பு மாற்றத்திற்கான அழைப்புத் தொடர்ந்து வருகின்ற சூழ்நிலையில், தேர்தற் சீர்திருத்தத்திற்கான வரைபுக்குரிய தேவை முக்கியத்தும் பெறுகின்றது. இலங்கையின் அத்திவாரத்தையே இத்திருத்தம் பாதிக்கக் கூடியதாக இருப்பதாலும். ஜனநாயகமானது இயல்பாகவே மக்களிடமிருந்தே வெளிவருகின்றமையாலும், அத்தகைய மாற்றங்கள் இலங்கைப்பிரஜைகளின் சிந்தனைகளிலிருந்தும், தோற்றப்பாடுகளிலிருந்தும் பெறப்பட வேண்டியதாகும்.

| |
|---|
| தேர்தற் சீர்திருத்தங்கள் |
| அதனைச் செயற்படுத்தும் உபாயங்கள் பற்றிய கலந்துரையாடலில் |
| அரசியற்கட்சிகள் சிவில், சமூகம், சிறுபான்மை மற்றும் |
| சமயக்குழுக்களிலிருந்து 900க்கு மேற்பட்டோர் பங்குபற்றினர். |

இலங்கையில் தேர்தல் முறைமைக்கான சீர்திருத்தமானது பரந்தளவிலான கலந்துரையாடல் மற்றும் ஆக்கபூர்வமான கலந்தாலோசனை ஆகியவற்றின் மூலம் வெளிவருவதற்கு மாற்றுக் கொள்கைக்கான நிலையம் (CPA) தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) சுதந்திரம் மற்றும் நேர்மையான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு, தேசிய சமாதானப் பேரவை (NPC) ஆகியவற்றினால் முன்னெடுக்கப்பட்டது. இதற்கான ஆதரவினை தேசிய ஜனநாயக நிறுவகமும் (NDI) நிதியுதவியினை சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் முகவர் நிறுவனமும் (USAID) வழங்கின. இக்கலந்துரையாடல்கள் நாடுமுழுவதிலும் தேர்தற் சீர்த்திருத்தற்கான விதந்துரைகள், அதனைச் செயற்படுத்துவதற்கான உபாயங்கள் ஆகியவற்றை அதன் பங்காளிகளிடமிருந்து உள்ளீடாகப் பெற ஊக்கமளித்தன. பங்காளிகளில் அரசியல் வாதிகள், சமயத்தலைவர்கள், பெண்கள் குழுக்கள் வர்த்தக சங்கங்கள் மற்றும் பல் வேறுபட்ட கலாச்சார மற்றும் இனக்குழுக்களின் பிரதிநிதிகள்அடங்குவர் இக்குழுக்களிலிருந்து அறிக்கைகள் பெறப்பட்டதுடன் மேலதிகமாக பொலிஸ் தேர்தற்செயலக அங்கத்தவர்கள், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க ஆகியோரும் கலந்தாலோசனைகளில் பங்குபற்றியிருந்தனர்.

இலங்கையின் அண்மைக்காலத் தேர்தல்களில் குறிப்பிடத்தக்களவில் வன்முறைகளும், பயமுறுத்தல்களும் குறைந்துள்ளமை கவனிக்கத்தக்கது. இது ஊக்கமளிக்கும் முன்னேற்றமாக இருப்பினும் தேர்தல் முறையில் உள்ள அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்ந்து தேர்தல் செயன்முறையைப் பாதித்து வருகின்றன. பல அரசியற் கட்சிகளால் இது அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் தேர்தற் சீர்திருத்தங்கள் அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. குறைவடைந்து செல்கின்ற தேர்தல் வன்முறைகள் தேர்தற் சீர்திருத்தத்திற்கான சூழலையுருவாக்கியதுடன் சிறப்பான வாய்ப்பினையும் ஊக்கத்தினையும் அளித்துள்ளது. மேலும் அரசியல் யாப்பு மாற்றம் பற்றிய பேச்சு மீண்டும் அரசியற் களத்தினுள் ஏற்பட்டுள்ளதுடன் தேர்தற் சீர்திருத்தம் பற்றிய விடயங்கள் புதுப்பிக்கப்பட்ட உடனடிவிடயமாகவிருக்கின்றது. கலந்துரையாடலுக்கான காலம் கனிந்துள்ளதுடன் அதனடிப்படையில் தேர்தற் சீர்திருத்தத்தினை செயற்படுத்துவதன் வாயிலாக தேர்தற் செய்முறையினை முன்னேற்றுவதுடன் இலங்கையின் சனநாயகத்தினையும் உயர்த்த முடியும்.

தேர்தற் சீர்திருத்தம் பற்றிய கலந்துரையாடலில் பங்கு பற்றிய ஒவ்வொரு குழுவும் வேறுபட்ட கருத்தினைத் தெரிவித்தன. ஆராயப்பட்ட விடயங்களில் குழுக்களிடையே கருத்தொற்றுமை ஏற்படவில்லையாயினும் சீர்திருத்தத்திற்கான முக்கிய அம்சங்களில் உடன்பாடு காணப்பட்டது: அரசியலில் பெண்கள் சிறந்த முறையில் ஈடுபடும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும், விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும், தேர்தற் காலங்களில் சட்ட ஆட்சி முறை வலுப்படுத்தப்பட வேண்டும், கட்சிகளில் உள்ளக சனநாயக முறை ஏற்பட ஊக்கப்படுத்துவதனால் வெளிப்படைத்தன்மை, நன்கு தகுதி பெற்ற அபேட்சகர்கள் தெரிவு செய்யப்படுதல், கட்சிப் பிரசாரத்தின் போது நிதியினை வெளிப்படுத்தல் ஆகியவற்றினால் அரசியற் கட்சிகளினால் அல்லது அபேட்சகர்களால் ஏற்படும் மோசடிகளை தேர்தற் காலங்களில் குறைக்க முடியும்.

நாடு முழுவதிலும் உள்ள பல அரசியற் சிந்தனைகளைக் கொண்ட குழுக்கள் மற்றும் தனியாள்களை ஒரு செயன்முறையில் ஈடுபடுத்தியதன் விளைவே இந்த ஆவணமாகும்.

## வரலாற்று மற்றும் அரசியல் பின்னணி

இலங்கை ஒரு சுதந்திரதேசம் என்ற வகையில் முதல் 30 வருட காலப்பகுதியில் தேர்தல்முறைமை 'கம்பத்தை முதல் கடந்த' மாதிரி (First past the post model – FPP) என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இம்முறைமையினை கீழ் பாராளுமன்ற அங்கத்தவர்களை (பா.உ) பன்மைத்தன்மையான வாக்குகளைப் பெற்ற, தனி அங்கத்தவர்கள் தேர்தற் தொகுதி மூலம் தெரிவு செய்யப்பட்டனர். அத்தகைய தொகுதிகளின் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்தில் செயற்பட்டனர். இம்முறைமை சில நாடுகளில் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்ற போதிலும் குறைந்த பெரும்பான்மை அல்லது தேசிய அடிப்படையில் வாக்களிக்கப்பட்ட சிறுபான்மை வாக்குகளால் அரசாங்கங்கள் தெரிவு செய்யப்பட்ட வழிவகுக்கின்றது என விமர்சிக்கப்படுகின்றது. FPP முறைமைகள் தேர்தல் மாவட்டங்கள் இனரீதியில் வரையறுக்கப்பட்டாலன்றி, சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்திற்கு ஏதுவாக அமைவதில்லை. ஏனெனில் வேட்பாளர்கள் தொகுதியிலுள்ள மிகப்பெரியதாக இருக்கும் உபபிரிவின் வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுகின்றார்களே அன்றி தொகுதியின் மொத்த வாக்காளர்களின் பெரும்பான்மை வாக்குகளால் அன்று.

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவம் (பி. ஆர்) 1978 ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பு மூலம் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். விகிதாசார பிரதிநிதித்துவம் முதன் முறையாக 1983 இடம்பெற்ற பொதுத்தேர்தலில் பயன்படுத்தப்பட்டது. (1978 இற்குப் பின்னர் நடைபெற்ற முதல் பொதுத்தேர்தல்) தற்போதைய முறைமையின் கீழ் சனத் தொகையடிப்படையில் தேர்தல் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. அரசியற் கட்சிகள் ஒவ்வொருமாவட்டத்திற்கும் அபேட்சகர்களின் பட்டியல்களை சமர்ப்பிக்கின்றன. ஒவ்வொரு வாக்காளரும் கட்சிக்கும் கட்சியின் பட்டியலில் உள்ள அபேட்சகரின் தெரிவு செய்யப்படுவதற்குள்ள தனது விருப்பத்தையும் குறித்துக் காட்டுவர். கிடைக்கப்பெற்ற விருப்பு வாக்குகளின் அடிப்படையில் தனிப்பட்ட அபேட்சகர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். சிறுபான்மை பிரதிநிதித்துவத்தினை இம்முறைமையானது முன்னேற்றியதாயினும், ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக வாக்குகளைப் பெற்ற கட்சிக்கு ஒரு போனஸ் ஆசனம் என்ற அரசியல் யாப்பு ஏற்பாடு விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தினை வலுவற்ற தாக்கியுள்ளது. போனஸ் ஆசனம் ஒவ்வொரு கட்சியினதும் கட்சியின் மாவட்டப்பட்டியல் ஊடாக நிரப்பப்படுகின்றது. தேசிய ரீதியில் ஒவ்வொரு கட்சியும் பெற்ற விகிதாசார வாக்குகளின் அடிப்படையில் 29 ஆசனங்கள் வழங்கப்படுகின்றன. நாட்டின் இருபிரதான அரசியற் கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சியும் இலங்கை சுதந்திரக் கட்சியும் தேர்தற் சீர்திருத்தத்திற்கான தேவையை அங்கீகரித்துள்ளன. 1994 இல் தங்களின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் அத்தகைய சீர்திருத்தங்களின் முன்மொழிவுகளையும் உள்ளடக்கியுள்ளன. தேர்தல் சீர்திருத்தம் தொடர்பாக சிவில் சமூகத்தினரால் முன்னர் விவாதங்கள் நடாத்தப்பட்ட போதிலும் எவ்வாறு தேர்தல் முறையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்வது பற்றி அரசியற் கட்சிகளுக்கிடையிலான உடன்பாடு குறைந்தளவினதாகவுள்ளது.

1978 இற்குப் பின் அரசாங்க அமைப்பிலும் அரசியல்யாப்பிலும் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக தேர்தல் முறையிலும் முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தினை நிர்ணயிக்கும் வெட்டுப்புள்ளியானது பதினான்காம் திருத்தத்தின் கீழ் மாற்றியமைக்கப்பட்டன குறிப்பிடத்தக்கதென கருதப்படுவதுடன் இறுதியில் பதினைந்தாம் திருத்தத்தின் மூலம் ஐந்துவீதமாக வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும் 1988ஆம் ஆண்டு மாகாணசபை தேர்தல் சட்டத்தின் மூலம் பதின்மூன்றாவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாணசபையிலும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய இலங்கையின் தேர்தல் முறைமையானது பெருமளவில் 1978ம் அரசியல்யாப்பிற்கிணங்க அமைந்ததாக உள்ளதுடன் பின்னர் திருத்தங்கள் சட்டவாக்கங்கள் மூலமாக திருத்தியமைக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டதாகும். பாராளுமன்ற தேர்தல் முறையில் மாற்றங்கள் அரசியல் யாப்புத் திருத்தங்களினூடாக மேற்கொள்ளுதல் அவசியமாகக் கருதப்படுகின்றதாயினும் சில மாற்றங்கள் அரசியல் யாப்பினைத் திருத்தாமல் தற்போதைய சட்டவாக்கங்களில் மேற்கொள்ளப்படும் சிலமாற்றங்கள் மூலம் மேற்கொள்ளக் கூடியதாகவுள்ளது.

## கலந்தாலோசனைச் செயன்முறை

*சீர்திருத்தத்திற்கான விதந்துரைகள்*

தேர்தற் சீர்திருத்தங்கள் தொடர்பான சீர்திருத்தங்கள் பற்றிய விதந்துரைகள் வழங்கும் ஆரம்ப கலந்துரையாடற் செயற்பாட்டில் 200 இற்கு மேற்பட்டோர் பங்கு பற்றினர். அத்துடன் இவ்விதந்துரைகளை செயற்படுத்தும் உபாயங்கள் பற்றிய கலந்தாலோசனையின் போது 600இற்கு மேற்பட்டோர் இணைந்திருந்தனர். சீர்திருத்தத்திற்கான விதந்துரை வழங்குவதற்கான ஆரம்பக் கலந்துரையாடல்கள் 2004 மேமாதம் முழுவதிலும், பவ்ரல், பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பு தேசிய சமாதானப்பேரவை ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டது. காலியில் துறைசார் நிபுணர்கள் உடனும் சிலாபத்தில் சமயத்தலைவர்களுடனும் கண்டியில் உள்ளூர் அரசியல் வாதிகளுடனும் கொழும்பில் சிவில் சமூகம், வர்த்தக சமூகம் ஆகியவற்றுடன் நான்கு கலந்துரையாடல் வகுப்புக்கள் பவ்ரல் மூலமாக நடாத்தப்பட்டன. தேர்தற் சீர்திருத்தம் தொடர்பாக பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முன்னர் ஒக்டோபர் 2003 இல் சமர்ப்பிக்கப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு நாடு முழுவதிலும் உள்ள நிறுவனங்களிலிருந்து அழைக்கப்பட்ட பெண் பிரதிநிதிகள் பங்குபற்றும் கலந்துரையாடலை மே 2004 இல் பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பினர் நடாத்தினார்கள். கொழும்பில் இந்தியத்தமிழர் சமுதாய அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றினை தேசிய சமாதானப் பேரவை (என்.பி.சி.) நாடாத்தியது. நன்கு சமூகமளிக்கப்பட்ட இறுதியான தேசிய மகாநாட்டில் மூன்று குழுக்களில் ஒவ்வொன்றும் தமது அறிக்கைகளைச் சமர்ப்பித்தன. இது மே 30 2004இல் கொழும்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (C.M.E.V.) ஆகியவற்றினால் ஒழுங்கு செய்யப்பட்டு இடம் பெற்றது.

வட்டமேசைக் கலந்துரையாடலில் பங்குபற்றிய பிரதிநிதிகளினால் முன்வைக்கப்பட்டவற்றைக்கு மேலதிகமான தேர்தல் ஆணையாளர் திரு. திசநாயக்கா, பொலிஸ் தேர்தல் பணிமனையிலிருந்து பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. காமினி நவரத்தின ஆகியோராலும் குறிப்புக்கள் முன்வைக்கப்பட்டன. மேலும் மார்கா நிறுவனம் மூலமாக எதிர்கால தேர்தல் சீர்திருத்தங்கள் பற்றிய ஆரம்ப கிராமிய பொது வாக்களிப்புத்தரவுகள் **(Rural Public polling data)** சமர்ப்பிக்கப்பட்டன. பொதுச்சேவை அரசாங்க சுதந்திர தொழிற் சங்க சம்மேளனமும் (COPSITU)தேர்தல் அலுவலர்களின் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்ட அறிக்கையொன்றை சமர்ப்பித்தனர் இச் சங்கம் அரசாங்க ஊழியர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இவ்வாறு பெறப்பட்ட பல்வேறு கருத்துக்கள் வருகை தரு

பேச்சாளர்களாலும் ஒப்பிட்டு அடிப்படையில் தேர்தல் முறைகள் மற்றும் மாற்றத்திற்கான பொது அம்சத்தினை விருத்திசெய்வதில் கவனம் செலுத்திய ஓர் கலந்துரையாடல் மூலமும் ஒன்று சேர்க்கப்பட்டது.

தேர்தற் சீர்திருத்தம் தொடர்பாக ஒரு தொகுதி விதந்துரைகளினை மே 30 இல் இடம்பெற்ற மகாநாட்டில் மீண்டும் ஒவ்வோர் குழுவினரும் அறிக்கை சமர்ப்பித்தனர். கலந்துரையாடல் செயற்பாட்டிலிருந்து காத்திரமான 13 விதந்துரைகள் செயல்படுத்துவதற்காக முன் மொழியப்பட்டதுடன் கலந்துரையாடப்பட வேண்டிய நான்கு விடயங்கள் மேலும் கலந்தாலோசனை மற்றும் கவனத்திற்காக இணங்காணப்பட்டன (மேலதிக விபரத்திற்கு கீழேயுள்ள விதந்துரைகள் பகுதியைப் பார்க்கவும்.)

*சீர்திருத்தங்களைச் செயற்படுத்துவதற்கான உபாயங்கள்*

நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாம்கட்ட காலப்பகுதியில் வட்டமேசை கலந்துரையாடலினால் உருவாக்கப்பட்ட விதந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு மேலும் பங்குதாரர்களுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடலை மேற்கொண்டு சீர்திருத்தத்தினை செயற்படுத்த உபாயங்களை காண்பதற்குரிய வழிவகைகளை தேடுவதெனவும் அத்துடன் ஆரம்ப வட்டமேசைக்கலந்துரையாடலில் உருவாக்கப்பட்ட விதந்துரைகளை அமுல்படுத்த வேண்டுமென தொடர்புடைய நிறுவனங்களை வற்புறுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் கலந்தாலோசனைக்கான அழைப்புக்கு பதிலிறுக்கும் வகையில் தேர்தற் சீர்திருத்தத்திற்கான உபாயங்கள் பற்றி கலந்தாலோசனைகள் செப்டம்பர் தொடக்கம் நவம்பர் 2004 வரை தொடர்ச்சியாக பவ்ரல் நடாத்தியது. இதில் பல்வேறுபட்ட சமூகப் பிரிவினர்களான சமயத் தலைவர்கள், அரசியல்வாதிகள், சேவையில் உள்ள மற்றும் இளைப்பாறிய அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள், சிவில் சமூக அங்கத்தவர்களைக் கொண்ட அமைப்புக்கள், சமூகத் தலைவர்கள் ஆகியோரும் உள்ளடங்குகின்றனர். மாவட்ட மட்டத்தில் 22 வட்டமேசை ஆலோசனைகளும் அவ்வாறே நான்கு மாகாண மட்டத்திலும் இடம் பெற்றன[1]. உயர் தேசிய மகாநாடு ஒன்று கொழும்பில் நவம்பர் 14, 2004 அன்று இடம்பெற்றது.

கலந்தாலோசனைகளில் மாவட்ட ரீதியில் 502 பேரும் மாகாண மட்டத்தில் 161 பேரும் பங்குபற்றினர் இவர்கள் உள்ளூர்மட்டத்தில், இந் நிகழ்ச்சித் திட்டத்தினை செயற்படுத்தும்வகையில், பவ்ரல் அமைப்பின் வலையமைப்பின் ஓர் பகுதியான நிறுவனங்களின் உதவியுடன் தெரிவு செய்யப்பட்டனர். தேசிய மகா நாட்டில் 148 பேர் பங்குபற்றினர். இதில் மூன்று மந்திரிகளும் இரண்டு பாராளுமன்ற அங்கத்தவர்களும் உள்ளடங்கலாக ஒன்பது அரசியல் வாதிகளும் அடங்குவர் இதில் பங்கு பற்றியோரில் அடங்கியோர் கொழும்பை மையமாகக் கொண்ட சிவில் சமூக நிறுவனப்பிரதிநிதிகள், மற்றும் வர்த்தக சமூகப் பிரதிநிதிகள் என்போரும் அடங்குவர். இவர்களில் சிலர் மாகாண, மாவட்ட கலநதுரையாடல்களில் பங்குபற்றியவர்களாவர்..

இந்த கலந்தாலோசனைகளின் தொடர்ச்சியாக பின்வரும் விடயங்கள் மீளாய்வு செய்யப்பட்டன. (அ) அரசொன்றில் அரசியல் யாப்பின் பங்கு (ஆ) தேர்தற் சீர்திருத்தங்களுக்கான காரணங்கள்/நியாயப்பாடுகள் (இ) இச்சீர்திருத்தங்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் (ஈ) தேர்தல் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தப்படும் செயன்முறை. (உ) தேர்தற் சீர்திருத்தத்தில் தனி நபர்களதும் சிவில் சமூக தாபனங்களின் பங்கு,

[1] மாவட்டமட்டத்தில் பங்குபற்றிய தாபனங்களில் அடங்குவன:- அம்பாறையிலுள்ள தேசிய இன ஒருமைப்பாட்டு மன்றம், மாத்தறையிலுள்ள மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழு, இரத்தினபுரியிலுள்ள மனித, ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான முன்னணி, கேகாலையிலுள்ள மனித அபிவிருத்தி நிலையம், அநுராதபுரத்திலுள்ள சமதீப சமாஜ கேந்திர, மட்டக்களப்பிலுள்ள சேவோ நிலையம், பதுளையிலுள்ள ஊவா விவசாய அபிவிருத்தி மன்றம், குருநாகலையிலுள்ள மனித உரிமைகள் அமைப்பு, பொலன்னறுவையிலுள்ள சர்வோதய அமைப்பு, யாழ்ப்பாணத்திலுள்ள சாவக்கச்சேரி வர்த்தக மன்றம், மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள் (ஐக்கிய பாடசாலை அமைப்பு) மாத்தளை (மத்திய மாகாணம், சர்வோதயம், வவுனியா (வட மாகாணம்), மனித உரிமைகள் அமைப்பு, காலி (தென் மாகாணம்), பவ்ரல், கொழும்பு (மேல் மாகாணம்)

இந்தப்பின்னணியில் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதந்துரைகளைச் செயற்படுத்துவதனை உறுதி செய்வதற்கான உபாயங்களை வகுப்பதற்காக பங்கு பற்றுநர்கள் சிறிய குழுக்களாக கலந்துரையாடல் மேற்கொள்ள பிரிக்கப்பட்டனர்.

தேர்தற் சீர்திருத்த செயற்பாட்டு திட்டத்தினை பிரஜைகள் மேலும் முன்னெடுப்பதற்குரிய வாய்ப்புக்களை மேலும் கண்டறிய முக்கிய பிரஜைகள் கலந்து கொள்ளும் வட்ட மேசைக் கலந்துரையாடல் ஒன்றினை மார்கா நிறுவனம் டிசம்பர் 15, 2004 இல் ஒழுங்கு செய்தது.

## தேர்தற் சீர்திருத்தத்திற்கான விதந்துரைகள்

தேர்தற் சீர்திருத்தத்திற்கான ஒரு தொகுதி ஆலோசனைகள் மே 30 ஆம் திகதி மகாநாட்டுக்கு ஒவ்வொரு குழுவினாலும் மீள அறிக்கையிடப்பட்டது. கலந்துரையாடல் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள காத்திரமான 13 விதந்துரைகளும் தொடர்ந்து கலந்தாலோசனை மற்றும் கவனத்திற்குரியவையாக நான்கு விடயங்களும் இனங்காணப்பட்டன.

**தேர்தற் சீர்திருத்தத்திற்கான விதந்துரைகள்**

1. குறைந்தது 30 வீதமான தெரிவு செய்யப்படும் பதவிகள் பெண்களால் நிரப்பப்படுவதினை உறுதிப்படுத்தல்.
2. தேர்தலில் தோல்வியுற்ற அபேட்சகர்கள் தேசியப் பட்டியல் நியமன மூலம் பாராளுமன்ற அங்கத்தவர்களாக வருவதை தடுக்கும் சட்டவாக்கங்களை அறிமுகப்படுத்தல்.
3. தேர்தல் பிரமாணங்களை மீறிய அபேட்சகர்களை அங்கீகரிக்காது விடுதல் மற்றும் ரத்துச்செய்யும் அதிகாரம் ஆகியவற்றை தேர்தல் ஆணையாளர் அல்லது தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்குதல்.
4. தேர்தலுக்கு முன்னர் அபேட்சர்கள் தங்கள் சொத்துக்களை வெளிப்படுத்த வேண்டும் என்பதனைத் தேவைப்படுத்துதல்.
5. அபேட்சகர்கள் மற்றும் அரசியற்கட்சிகள் தேர்தற் பிரச்சாரத்திற்கான செலவுக் கணக்கினை வெளிப்படுத்துவதற்கு அரசாங்க, அல்லது சுதந்திர கணக்காய்வாளர் ஒருவர் பரிசீலிக்க வேண்டிய தேவைப்பாட்டினை ஏற்படுத்தல்.
6. அபேட்சகர்கள் மற்றும் கட்சிகளின் தேர்தற் செலவுகளை மட்டுப்படுத்தல்.
7. ஒவ்வொரு தேர்தலினதும் பிரச்சாரக் கால ஆரம்ப நாளிலிருந்து, நடுநிலைமையைப் பேணும் வகையில், இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களை (அரசாங்க, தனியார்) மேற்பார்வை செய்யும் பொறுப்பினை தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்குதல் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிக்கு / அதிகாரசபைக்கு வழங்குதல்.
8. இலங்கைச் சட்டங்களை மீறிய அல்லது நல்லாட்சிக்குரிய நியமங்களை உதாசீனம் செய்யும் பிரதிநிதிகளை மீள அழைப்பதற்கான பொறிமுறையை உருவாக்குதல்.
9. அரசியல் நோக்கத்திற்காக தேர்தற் திகதியை தீர்மானிக்கும் நடைமுறையினை தடுக்கும் முகமாக தகுந்த,ஒழுங்குமுறையிலான நிர்ணயிக்கும் முறையை ஏற்படுத்தல்.
10. அபேட்சகர்கள் தொடர்பான தற்போதைய சட்டங்களின் படி குற்றவியற் பதிவுகள் அமுல்நடாத்தப்படுகின்றதா என்பதை பொதுமக்கள் கண்காணிக்கும் வகையில் உறுதி செய்தல்.
11. தேர்தற் தொகுதி அல்லது வாக்களிக்கும் பிரதேச எல்லைகள் சிறுபான்மை மக்களை எதிர்மறையாக பாதிக்காதிருப்பதனை (வாக்களிப்பதற்கு சிறுபான்மையினரை இரு குழுக்களாக பிரித்தல் போன்றவை) உறுதிப்படுத்தல்.
12. வெளிநாட்டில் வசிக்கும் பிரஜைகள் அல்லது தேர்தற் தினத்தன்று வாக்களிக்க முடியாதவர்களை வாக்களிப்பதனை தடை செய்யாது தபால் மூலம் வாக்களிக்கும் மற்றும் முன் வாக்களிப்பு நடைமுறைகளை உறுதிப்படுத்தல்.
13. பதினேழாம் திருத்தத்திற்கிணங்க தேர்தல் ஆணையகத்தினை அமைத்தல்

**மேலும் கலந்துரையாடலுக்கான விடயங்கள்**

1. விகிதாசாரப் பிரதிநிதித்துவம் (பி.ஆர்) மற்றும் 'கம்பத்தை முதல், கடந்த', (FFP) தேர்தல் முறைகளின் கலப்பு தேர்தற் முறையினை கலந்துரையாடி செயற்படுத்த அரசாங்க செயற்பாட்டாளர் மூலமாக உண்மையான அர்ப்பணத்தினைப் பெறல். பெரும்பான்மை வாக்குகளுக்கிணங்க பாராளுமன்றத்தில் ஆசனங்களைப் பங்கீடு செய்வதனை உறுதிப்படுத்துவதுடன் இம்முறைமை தேர்தல் தொகுதி பிரதிநிதித்துவத்தினை அனுமதிக்க வேண்டும். கலந்துரையாடலுக்குரிய விசேட விடயங்களில் அடங்குவன: அபேட்சகர்களின் பெயர்ப்பட்டியல் திறந்ததாக அல்லது இரகசியமாக இருக்க வேண்டுமா, எவ்வாறு பிரதேசக் கட்சிகளையும் சுயேச்சை அபேட்சகர்களையும் கையாள்வது. அத்துடன் எந்த மட்டத்தில் அரசாங்கம் இந்த முறைமையினை பிரயோகிப்பது (தேசியத்தேர்தல், மாகாண தேர்தல்கள், உள்ளூர்த் தேர்தல், ஏனையவை).
2. கட்சிகள் பெண்களை அபேட்சகர்களாக நிறுத்த ஊக்குவிக்கும் வழிமுறைகளை ஆராய்தல் அவ்வூக்கத்தினை வலுப்படுத்த நிதிவளங்கள் மற்றும் ஆதரவினை வழங்குதல்.
3. தகுதியான சகல பிரஜைகளுக்கும் அடையாள அட்டைகளை வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்த தேசிய ரீதியிலான ஒழுங்கமைப்பு பற்றிக் கலந்துரையாடுதல்
4. அரசியல் யாப்பு மாற்றத்திற்கான வாய்ப்புக்களைக் கண்டறிதல். இதில் தனியொரு நபரிடம் இருக்கும் நிறைவேற்று அதிகாரத்தினை நீக்குதல், இருபிரிவுகளைக் கொண்ட பாராளுமன்ற சட்டவாக்க அமைப்பினை ஏற்படுத்தல் என்பன அடங்குகின்றன.

ஒவ்வொரு குழுவும் சுதந்திரமாக சிந்திக்க முடிந்த போதிலும் குறிப்பிட்ட விதந்துரை தொடர்பாக சில உடன்பாடின்மை காணப்பட்ட போதிலும் மேற்குறிப்பிட்ட விதந்துரைகள் சுதந்திர செயற்பாட்டின் உச்சநிலையை வெளிக்காட்டுவதுடன் தேசிய மகாநாட்டிலும் வட்டமேசை கலந்துரையாடல் இரண்டிலும் தெரிவிக்கப்பட்ட மாற்றத்திற்கான பரந்த உடன்பாட்டினைப் பிரதிபலிப்பதாகவும் அமைந்தது. விதந்துரைகள் அதன் தொடர்பு அடிப்படையில் குழுக்களாக வகுக்கப்பட்டன அவையாவன: தேர்தல் முறைமை, கட்சிகளும் அபேட்சகர்களும், பெண்களும் குறைந்த பிரதி நிதித்துவம் வகிக்கும் குழுக்களும், வாக்களிப்பும் தேர்தலும், ஊடகங்கள் மற்றும், அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் ஆகியவை, சில விதந்துரைகள் துல்லியமான முன் மொழிவுகளாகவும் உடனடியாக செயற்படுத்தக்கூடியதாக இருக்கின்றன. ஏனையவை மேலும் கலந்துரையாடலுக்குரியவையாகும். காத்திரமான முன்மொழிவுகளும் கலந்துரையாடலுக்குரியவையுமான பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

*தேர்தல் முறைமை*

> "விகிதாசார பிரதிநிதித்துவம் மற்றும், 'கம்பத்தை முதல் கடந்த தேர்தல் முறைமை ஆகியவற்றை உள்ளடக்கிய கலப்புத் தேர்தல் முறைமை பெரும்பான்மையான மக்களின் விருப்பத்தை மேலும் சிறப்பாகப் பிரதிநிதி."

வாக்களிப்பு முறைமை மற்றும் பிரதிநிதித்துவம் ஆகியவற்றில் ஏற்படுத்தும் நேரடி மாற்றமானது தேர்தல் சீர்திருத்தங்களின் அடிநாதமாக விளங்கும். மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு அறிக்கையும் சில வகையான மாற்றத்தினை இம் முறைமையில் ஏற்படுத்துவதற்கு முன்மொழிந்தது. **விகிதாசாரப்பிரதி நிதித்துவமும், கம்பத்தை முதல் - கடந்த - (எவ்.பி.பி) ஆகியவற்றை உள்ளடக்கிய வாக்களிப்பு முறை இலங்கையில் முன்னர் ஆலோசனையாகக் கூறப்பட்டிருந்தது. வட்ட மேசைக்கலந்துரையாடலில் பங்குபற்றியோரிடமிருந்து இந்த விதப்புரைக்கு பரந்த ஆதரவுகிடைக்கப்பெற்றது.** இந்த இரு முறைகளையும் இணைத்து அமைக்கப்படும் தேர்தல் முறையானது பெரும்பான்மையினரால் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதனை மேலும் உறுதி செய்வதுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் புவியியல் ரீதியான தேர்தற் தொகுதிக்கும் பதில் கூறவேண்டிய பொறுப்பினையும் உறுதிப்படுத்துகின்றது. கலப்பு முறைமையானது உலகின் ஏனைய பகுதிகளிலும் வெற்றிகரமாக செயற்படுவதாக தோற்ற மளிப்பதுடன் "இரு உலகங்களிலும் சிறந்ததென்ற" ("best of both worlds") அபிப்பிராயத்தினை தோற்றுவிக்கின்றது. ஜேர்மனிய தேர்தல் முறைமையானது தேர்தல்

வடிவமைப்புக்கான வெற்றிகரமான மாதிரியாக அடிக்கடி எடுத்துக்காட்டப்படுகின்றது. ஜேர்மன் மாதிரியானது தேர்தற் தினத்தன்று வாக்காளர்களுக்கு இருவாக்குகளை அளிப்பதற்கு வாய்ப்பளிக்கின்றது. இதில் ஒன்று உள்ளூர்த் தொகுதிக்கான அபேட்சகருக்கு ஒருவாக்கினையும் மற்றைய வாக்கினை தேசிய கட்சிக்கு வாக்களிக்கவும் பயன்படுத்தலாம். தேசியரீதியில் கூடுதல் சராசரி வாக்குகளைப் பெற்ற கட்சிகளிற்கு விகிதாசார அடிப்படையில் பாராளுமன்றத்திற்கு ஆசனங்கள் ஒதுக்கப்படும் அதேவேளை எவ்.பி.பி. (FPP) முறையினால் தேர்தற் தொகுதியில் பெற்ற வாக்குகளினால் அபேட்சகர்கள் தெரிவு செய்யப்படுகின்றார். சகல தேர்தற் தொகுதிகளுக்கும் தீர்மானிக்கப்பட்ட பின்னர் மேலதிக ஆசனங்கள் தேசிய ரீதியில் கட்சிகள் பெற்ற வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏதுவாக ஒதுக்கப்படுகின்றன. புவியியல் ரீதியாக தேர்தற் தொகுதியுடன் அபேட்சகர்களை இணைப்பதனை உறுதிப்படுத்துவடன் அதே வேளை கட்சிகளுக்கு அவர்களின் பெரும்பான்மை ஆதரவு மட்டத்திற்கு இணங்க ஆசனங்கள் வழங்கப்படுகின்றன.

இம்முறைமையானது பல அனுகூலங்களைக் கொண்டிருந்த போதிலும் இதனைச் சகலரோக நிவாரணியாகக் கருத முடியாது. எந்த திருத்தமும் உண்மையில் கலப்பு முறையினால் வரும் பயன்கள் பற்றிய பொது உடன்பாட்டிற்கு அப்பாற்பட்டு செல்வதாக அமைதல் வேண்டும். அத்துடன் அம்முறை இலங்கைக்கு எவ்வாறு மிகவும் பொருத்தமான தாக்கப்படலாம் என்பதனையும் ஆராய்தல் வேண்டும். விகிதாசாரப் பிரதிநிதித்துவம் எவ்.பி.பி முறை ஆகியவற்றிற்கிடையிலான சமநிலை மிகவும் கவனமாகக் கையாளப்பட வேண்டியதொன்றாக இருப்பதுடன் அறியப்படாத வெளிநாட்டு முறையின் போலியானதாக அமையக்கூடாது. **அர்பணிப்புள்ள அரசாங்க செயற்பாட்டாளர்கள், பொதுமக்களின் அங்கத்தவர்கள், சிவில் சமூகம் ஆகியவற்றிற்கிடையே இடம் பெறும் கலந்துரையாடல் ஒன்று இலங்கைக்கான கலப்பு முறையினை எவ்வாறு சிறந்த முறையில் வடிவமைக்கலாம் என்பதனைத் தீர்மானிப்பதற்கு அவசியமானது. உள்ளூர் தேர்தல்கள் எப்.பி.பி. முறையினை மட்டும் பயன்படுத்த வேண்டுமா? இலங்கை 'மிகவும் உயர்த்தும்' (topping up) முறைமையை அல்லது வேறு மாதிரியைச் செயற்படுத்த முடியுமா? தேசியப் பட்டியல்கள் மூடியதாக அன்றி திறந்ததாகவா இருத்தல் வேண்டும் இத்தகைய வினாக்களுக்கு சீர்திருத்தம் செயற்படுத்தப் படுவதற்குமுன்னர் விடை காணப்படல் வேண்டும்.**

**தேசியப்பட்டியலை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற வினா தனக்கேயுரிய முக்கியத்துவத்தை உடையது. தேர்தற் தொகுதியினால் நிராகரிக்கப்பட்ட ஒருவரை தேசியப்பட்டியல் மூலமாக நியமிப்பதற்கு சேர்த்துக் கொள்ளுதல் பற்றி வட்டமேசை கலந்துரையாடல் குழுவினால் கடுமையாக விமர்ச்சிக்கப்பட்டது.** ஒரு மூடிய தேசியப் பட்டியலை தொடர்ந்து பின்பற்றும் அதேவேளையில் குறிப்பாக, இந்த நடைமுறையைப் பின்பற்றுவதற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொள்வதா என்பதும் அல்லது தேர்தல்களின் போது திறந்த பட்டியலை வைத்திருப்பதா என்பதும் கலந்துரையாடலுக்குரிய விடயமாகின்றது. இங்கு முக்கியமாக அவதானத்தில் கொள்ள வேண்டியது யாதெனில் தேசியப் பட்டியல் நியமனங்களினூடாக மக்கள் தேர்தலில் வெளிப்படுத்திய விருப்பு பாதிக்கப்படாமல் இருப்பதனை உறுதிப்படுத்துவதாகும்.

தேசிய பட்டியல் மூலமாக பொதுமக்களின் தீர்மானம் சிறுமைப்படுத்தப்படுதல் தெளிவான போதிலும் நுட்பமான சூழ்ச்சித்திறனால் அச்சுறுத்தல், பயமுறுத்தல், தேர்தற் சட்டங்களை மீள்நடாத்தல் ஆகியவை குறைந்த முக்கியத்துவம் உடையதல்ல. இவ்வாறான சம்பவங்களில் குறிப்பிட்ட தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியை தொகுதியிலிருந்து விரட்டுவதற்கு வழியிருக்குமாயின் தவறான நடத்தையை மறைமுகமாக தடைசெய்ய வழிவகுக்கும். **இலங்கையின் சட்டங்களையும் நல்லாட்சி நியமங்களையும் கருத்திற் கொள்ளாது மீறியவர்களை திருப்பி அழைக்கும் பொறிமுறை ஒன்று பின்பற்றப்படுவதனை தேசிய சமாதானப் பேரவையும் பவ்ரல் அமைப்பு அறிக்கைகளும் ஊக்குவிப்பனவாகவுள்ளது.**

இறுதியாக அரசியற் சக்தியுள்ளோர் தேர்தற் திகதியை தீர்மானிப்பதை தடை செய்வதனால் ஒழுங்கான தேர்தல் மூலம் ஜனநாயத்தினை திறன்மிக்கதாக வளர்ப்பதில் முக்கிய பங்கினை வகிக்க முடியும் அதேவேளை சிபாரிசு செய்யப்பட்ட தேர்தல் திகதியானது சர்வ இறுதியானது அன்று. என்னும்பல நாடுகளில் இது பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவின் தேர்தல் முறைமையின் பிரதான பகுதியாக இது உள்ளது. **தேர்தல் திகதியை நிர்ணயிப்பதற்காகவும் அதன் மூலம் தேர்தல் முறையில் பெரியளவில் எதிர்வு கூறலுக்கும் குறிப்பிடத்தக்களவு ஆதரவு கலந்துரையாடல் நடைபெற்ற காலப்பகுதியில் இருந்தது.** இது எவ்வாறு செயற்படுத்தப்பட வேண்டும் மென்பது பற்றி கலந்துரையாடப்பட வேண்டியுள்ளது. எனினும் தற்போதைய அரசாங்க முறைமையில் முன்கூட்டியே தேர்தற் திகதியை தீர்மானிக்கும் வசதியை ஏற்படுத்தலாம் என்பது கலந்துரையாடலின் போதான பொதுவான நம்பிக்கையாகவிருந்தது.

*கட்சிகளும் அபேட்சகர்களும்*

ஜனநாயகத்தின் இதயமாக தேர்தல் முறைமை அமையுமானால் அபேட்சகர்களும் அரசியற்கட்சிகளும் அதன் உயிர்வாழ்வுக்கான குருதியாக விளங்குகின்றது. அரசியல் முறைமையில் மக்களின் நம்பிக்கையும் ஈடுபாடும் அரசியல் கட்சிகளினதும் அவற்றின் வேட்பாளர்களினதும் நேர்மை மீது பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கையில் தங்கியுள்ளது. அத்தகைய நம்பிக்கையின்மையானது முழு முறைமையையும் பயமுறுத்துவதாகவும் சிறுமைப்படுத்துவதாகவும் அமையலாம்.

> "தேர்தற் சட்டங்களை மீறும் அபேட்சகர்களின் தெரிவினை ரத்துச் செய்யும் அதிகாரத்தினை தேர்தல் ஆணையாளருக்கு வழங்குவதன் மூலம் வாக்குச் சாவடியில் நிகழும் வன்முறைச் சம்பவங்களைக் குறைக்கலாம்."

**இதனை மனதிற் கொண்டு தேர்தல் சட்டங்களை மீறும் அபேட்சகர்களின் தெரிவினை இரத்து செய்யும் அதிகாரத்தினை தேர்தல் ஆணையாளருக்கு வழங்குவதனை கலந்துரையாடலில் பங்குபற்றியோர் பெருமளவுக்கு ஆதரித்துள்ளனர்.** CMEV மற்றும் CPA ஆகியவற்றினால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய மகாநாட்டில் தேர்தல் ஆணையாளர் இதற்கு ஆதரவளித்ததுடன் இவ்வாறான அதிகாரம் வாக்குச் சாவடியில் நிகழும் வன்முறைகளைக்குறைக்க முடியும் என்ற தனது சொந்தக் கருத்தினையும் தெரிவித்தார். வட்ட மேசை மகாநாட்டில் பங்குபற்றிய பலர் குற்றவியல் பதிவுகளுடன் தொடர்புடைய அபேட்சகர்களை தடைசெய்து குற்றவியல் தொடர்பான தற்போதைய சட்டங்கள் நன்கு அறிந்திருப்பதனை உறுதிசெய்ய வேண்டும் என்பதனை ஆதரித்துப்பேசினார். **தற்போதைய சட்டங்களின் அடிப்படையில் குற்றவியற் பதிவுகள் அல்லது அண்மைக்கால குற்றங்களில் ஈடுபட்டோரை தேர்தலில் நிற்பதனை தடைசெய்கின்ற போதிலும் அவை அமுல் செய்யப்படுகின்றதா என்பதோடு அமுல் செய்யப்படுவது பற்றி பொதுமக்கள் அறிந்து கொள்ளலும் மிகவும் அவசியமானதாகும்.**

கட்சிகள் ஒழிவு மறைவின்றி வெளிப்படையாக செயற்படுதலை விருத்தி செய்தல் அரசியல் முறைமையின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை மேலும் அதிகரிக்கச் செய்யும். தேர்தலுக்கான நிதி பெறுதலையும் செலவு செய்வதனையும் பற்றிய தகவல் பொதுமக்களுக்கு கிடைக்கப் பெறச்செய்ய முடியுமாயின் அவர்களிடத்து பொறுப்புக் கூறும் கடமை அதிகரிக்கும். வட்ட மேசை கலந்துரையாடலின் போது மூன்று ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. **1) அபேட்சகர்கள் தேர்தற் பிரச்சாரம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் தங்களின் சொத்துக்களை வெளிப்படுத்துவதை தேவைப்பாடாக்கல். 2) அபேட்சகர்களும் கட்சிகளும் தங்களின் பிரச்சாரச் செலவுகளை வெளிப்படுத்துவதனை தேவைப்பாடாக்கல் 3) தேர்தற் செலவுகளுக்கு எல்லை வகுத்தல்.** இத் தகவல்களை பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவதா அல்லது சுதந்திரமான தேர்தற் கண்காணிப்புக்குச் சமர்ப்பிப்பதா என்பது மேலும் கலந்துரையாடலுக்குரிய விடயம். இக் கலந்துரையாடலுக்கான தேவை மிகவும் முக்கியமானதாகவும் கருதப்படுகின்றது.

*பெண்கள் மற்றும் ஏனைய குறைந்த பிரதிநிதித்துவம் வகிக்கும் குழுக்கள்*

> "தேர்தல் முறைமையில் நீதியான அணுகுமுறையை ஊக்கப்படுத்தப் படுதல் தவறுமாயின் தேர்தல் முறைமையிலிருந்து தேர்தற் தொகுதி ஒதுக்கப்படுத்த மேலும் அதிகப்படுவதுடன் அதிலிருந்து நீங்கப்படும் நிலை ஏற்படும்."

தற்கால இலங்கை அரசியலில் மிகவும் முக்கியமான பிரச்சினையாகக் கருதப்படுவது அரசியல் முறைமையில் ஈடுபடும் பெண்களின் தொகை குறைவாகவிருத்தலாகும். சனத் தொகையில் 52 வீதமானவர்கள் பெண்களாகக் காணப்பட்ட போதிலும் அரசியலில் மற்றும் உள்ளூர் மற்றும் தேசிய அரசியல் அலுவலகங்களிலும் உள்ள பெண்களின் தொகை 1.9 வீதமாக தொடர்ந்து இருந்து வருகின்றது. தேர்தல் முறைமையினை சமசந்தர்ப்பமளித்து அணுக ஊக்கமளிக்க தவறுமிடத்து அதன் மூலம் மேலும் ஓரங்கட்டப்படுவதுடன் தேர்தல் தொகுதியிலிருந்து நீங்கியிருக்க வேண்டிய நிலையையும் ஏற்படும்.இத்தகைய தோல்வியானது வாக்களிக்கும் முறைமை மற்றும் அரசியல் கட்சிகளின் நடத்தை ஆகியவற்றை மீறி நிற்கின்றவாயினும் இவை இரண்டினாலும் செல்வாக்குச் செலுத்தப்படுபவை.

இந்த திரிசங்கு நிலையை எதிர்கொள்ள பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்ட வட்டமேசை கலந்துரையாடலில் பெண்களுக்கு **தேர்ந்தெடுக்கப்படும் பதவிகளுக்கு ஆகக்குறைந்தது 30 வீதமான பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்தும் பிரமாணங்களுக்கு ஆதரவாக கருத்துத் தெரிவிக்கப்பட்டது**. இத்தகைய ஏற்பாடானது பெண்கள் அந்தஸ்துக்கான ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவினால் பெண்கள் சமத்துவத்தினை ஊக்குவிப்பதற்கு அவசியமான அடிப்படைத் தேவையாக இனங்காணப்பட்டது. மேலும் கட்சிகள் மட்டத்தில் பெண்களின் பங்குபற்றலை ஊக்குவிக்க யதார்த்த பூர்வமான வழிகள் (பயிற்சி மற்றும் கல்வி நிலையை உயர்த்தல், பெண் அபேட்சகர்களுக்கு நிதி வசதியளித்தல் போன்றன) இனங்காணப்படல் பெண்கள் இப்பதவிகளுக்கு போட்டியிடுவதை ஊக்குவிப்பதற்கு அவசியமானவை. அண்மையில் அமைச்சரவையின் ஏகோபித்த விதந்துரையின்படி மாகாண, மற்றும் உள்ளூர் தெரிவு செய்யப்பட்ட அமைப்புக்களின் பெண்களின் பிரதிநிதித்துவம் 33 வீதமாக இருக்க வேண்டும் எனத்தீர்மானிக்கப்பட்டது. இந்தக்கருத்திட்டத்தின் மூலம் உள்ளூர், தேசிய அரசியற் தலைவர்களுக்கு இவ்விதந்துரைகள் முன்வைக்கப்பட்டு சட்டமன்ற அங்கத்வர்களின் ஆதரவு பெறப்பட்டது.

அரசியல் முறைமையில் சிறுபான்மை மக்களின் குரல் ஒலிக்காதிருப்பதும் கவலைக்கு காரணமாகின்றது. இதற்கு இலகுவான தீர்வுகள் இல்லாதிருக்கும் வேளையில் சிறுபான்மையினர், முறைமையில் பரந்த நம்பிக்கையும் அக்கறை கொள்ளும் வகையில், உயர்ந்த நேர்மறையானதும் முன்னேற்றகரமானதுமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளின் ஆரம்பக்கட்டமாக தேர்தல் மாவட்டங்கள் உள்ளூர் மக்களின் **இயற்கை வழி அமைந்த எல்லையை கருத்திற்கொண்டு உறுதிப்படுத்துவதினூடாக சிறுபான்மை மக்களின் குரல்கள் குறைந்து செல்வதனை ஊக்குவிக்க முடியாத நிலையை ஏற்படுத்த வேண்டும் என இந்நிகழ்ச்சித் திட்ட பங்குபற்றுநர்கள் முன்மொழிந்தனர்.**

*வாக்களிப்பும் தேர்தல்களும்*

ஏப்ரலில் இடம்பெற்ற பாராளுமன்றத்தேர்தலில் அவதானிகளில் பலரும் பங்குபற்றுநர்களும், தேர்தல் ஆணையாளர், COPSITU மற்றும் பெண்கள், ஊடகக் கூட்டமைப்பு உட்பட, தபால் வாக்களிப்பு முறையில் உள்ள பிரச்சினைகளையும் அது மக்கள் தொகையின் ஒரு பகுதியினரை வாக்களிக்கும் உரிமை இழக்கச் செய்யும் நிலையையும் பட்டியற் படுத்தினர் **வெளிநாட்டில்வேலை செய்யும் வாழும் இலங்கையர்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்கான செயல் முறை விருத்தி செய்யப்பட வேண்டும். வெளிநாட்டில் இருந்த போதிலும் சொந்த ஊரில் நிகழும் அரசியல் தீர்மானங்களில் பங்கெடுக்க அவர்களுக்கு வாய்பளிக்க வேண்டும். மேலும் தேர்தல் தினத்தன்று நேரம் கிடைக்காதவர்கள் வாக்களிப்பதனை உறுதி செய்யும் நடைமுறைகள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் அவ்வாறான நிலையில் உள்ளவர்கள் வாக்களிப்பதிலிருந்து தடுக்கப்படாத நிலைமையை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.**

தேசிய அடையாள அட்டையினை வாக்காளர் அடையாளத்தை நிரூபிப்பதற்கு பயன்படுத்துவது பற்றிய விடயம் இலங்கையில் பல வருடங்களாக பேசப்பட்டு வருகின்றது. வாக்களிப்பு பதிவு செய்யப்படுவதில் உள்ள ஒழுங்கீனம், வாக்காளர் மோசடி ஆகியவை தொடர்பான பிரச்சினைகளுக்கு இத்தகைய அணுகுமுறை தீர்வொன்றை அளிக்கக் கூடும் என வட்டமேசைக்கலந்துரையாடல் மூலமான அறிக்கைகள், கலந்துரையாடல் ஆகியவற்றின் மூலம் குறிப்பிடத்தக்களவு அக்கறை வெளிக்காட்டப்பட்டது. எதிர்வரும் தேர்தல்களின் வாக்களிப்பில் அடையாள அட்டையை வைத்திருப்பதனை கட்டாயமாக்கும் சட்டமூலம் ஒன்று செப்டம்பர் மாதம் 2004 இல் பாராளுமன்றத்தில் மசோதா நிறை வேற்றப்பட்டது. இக்கருத்திட்டம் அரசியல் வாதிகள் மட்டத்திலும் பொது மக்களிடத்தேயும் இவ்விடயம் பற்றிய விழிப்புணர்வு, ஊடகங்கள் மூலமும் கலந்துரையாடலினாலும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு தகுதியான பிரஜையும் தேசிய அடையாள அட்டையைப் பெறுவதனை உறுதிப்படுத்தல் ஒரு சவாலாகவே தொடர்ந்து இருந்து வருகின்றது.

> "செப்டம்பர் மாதம் 2004 இல் தேசிய அடையாள அட்டையை எதிர்காலத்தில் வாக்களிப்பின் போது கட்டாயமாக்கும் சட்ட மூலம் ஒன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஒவ்வொரு தகுதியான பிரஜையும் தேசிய அடையாள அட்டையைப் பெறுவதனை உறுதிப்படுத்தல் ஒரு சவாலாகவே தொடர்ந்து இருந்து வருகின்றது."

*ஊடகங்கள்*

தற்கால ஜனநாயக நடைமுறையில் தேர்தலின் போது பொதுமக்கள் தகவல்களை அறிந்து கொள்ளக் கூடிய வகைமுறை ஒரு முக்கியமான அம்சமாகவுள்ளது. புறநிலை மெய்மையான, பக்கச்சார்பற்ற தகவல்களை வழங்குபவர்கள் என்ற வகையில் தேர்தல் மற்றும் சனநாயக நடைமுறையில் ஊடகங்கள் பிரதான பங்கை வகிக்க முடியும். **தேர்தல் பிரச்சார காலத் தொடக்கத்திலிருந்து ஊடகங்களை, வலிமை மிக்க மேற்பார்வை செய்யும் பங்கினை, தேர்தல் ஆணையத்திற்கு அல்லது தொடர்புடைய வேறோர் அதிகார சபையிடம் வழங்க வேண்டுமென பல்வேறு வட்டமேசைக் கலந்துரையாடல்களில் வலியுறுத்தப்பட்டது.** இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தையும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தையும் மேற்பார்வை செய்வதற்கு ஒரு தகுதிவாய்ந்த அதிகாரி/ அதிகாரசபை சபையை தேர்தல் ஆணயாளர் நியமனம் செய்வதற்கு அதிகாரம் வழங்கும் பதினேழாவது திருத்தத்தின் ஏற்பாடுகளையும் இது தொடர்பாக இடம்பெற்ற அண்மைக்கால வழக்குகள் இவ் ஏற்பாடுகளிற்கு வழங்கிய பொருள்கோடையையும் அடிப்படையாகக் இவை கட்டியெழுப்பப்பட வேண்டும். இம் முன் மொழிவுகள் பதினேழாவது திருத்தத்தின் ஏற்பாடுகளுக் கேற்ப மதிப்பீடு செய்யப்பட வேண்டும் அத்துடன் இவை தற்போதைய அரசியல் யாப்பு அமைப்பின் கீழ் அல்லது இவை அரசியல் யாப்பு மாற்றம் வாயிலாக செயற்படுத்த முடியுமா என்பதனை தீர்மானிக்க வேண்டியதாகவுள்ளது.

*அரசியலமைப்பு சீர்திருத்தம்*

இறுதியாக அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ள அரசியல் முறைமையிலிருந்து தேர்தல் முறைமை பிரிந்து செயற்பட முடியாதென்பது வெளிப்படையானது. வட்டமேசை கலந்துரையாடலில் இது பற்றி கவனம் செலுத்தப்படாவிடினும் **தனிநபர் ஒருவரிடம் உள்ள நிறைவேற்று அதிகாரத்தினை நீக்குவதோடு இரு பிரிவுகளைக் கொண்ட பாராளுமன்ற சட்டவாக்க அமைப்பினை ஏற்படுத்துவதற்கு பல குழுக்கள் ஆதரவு வழங்குவதாகக் கருத்துத்தெரிவித்தன. இவ்வாறான இரு பிரிவு சட்டவாக்க மூலம் ஜனநாயக முறையின் கீழ், பிரதேச மற்றும் சிறுபான்மையினரின் நலன்களையும் பாதுகாக்க முடியும் என்பதற்கான வழிமுறையாக இதற்கு ஆதரவு அளிக்கப்பட்டது.**



சமயத்தலைவர்களின் கலந்துரையாடலில் பங்குபற்றியோர்




துறை சார் நிபுணர்களின் கலந்துரையாடலில் பங்கு பற்றியோர்



நவம்பர் 2004இல் தேர்தற் சட்டத் தீர்திருத்தம்: செயற்பாட்டிற்கான உபாயங்கள் தொடர்பான தேசிய மகாநாட்டில் எரிசக்தி, வலு அமைச்சர் கௌரவ சுசில் பிரேமஜயந்த உரையாற்றுகிறார்




ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித்தலைவர் கௌரவ கரு ஜயசூரிய, பவ்ரல் அமைப்பின் தலைவர் திரு. கிங்ஸ்லி றொட்றிக்கோ ஆகியோர் நவம்பர் 2004 இல் இடம்பெற்ற தேர்தற் சட்டச்சீர்த்திருத்தம்: செயற்பாட்டு உபாயங்கள் பற்றிய தேசிய மகாநாட்டில்




தேர்தல் செயன்முறை, சீர்திருத்தம் பற்றிய இறுதிக் கலந்துரையாடலில் பங்குபற்றியோர்; மே, 2004



மாவட்ட மட்ட கலந்துரையாடலில் பங்குபற்றியோர்




மே 2004 இல் இடம் பெற்ற தேர்தற் செய்முறை மற்றும் முறைமை பற்றிய இறுதிக் கலந்துரையாடலில் தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க உரையாற்றுகிறார்.




மே 2004 இல் இடம் பெற்ற தேர்தற் செய்முறை முறைமை பற்றிய இறுதிக்கலந்துரையாடலில் திருமதி சுனிலா அபய சேகரா இணைப்பாளர், சி.எம்.ஈ.வி. மற்றும் பெண்கள், மற்றும் ஊடகக் கூட்டமைப்பு, தலைமை வகிக்கின்றார்.

## செயற்படுத்துவதற்கான உபாயங்கள்

முன்பு குறிப்பிட்ட விதந்துரைகளை செயற்படுத்தக் கூடிய உபாயங்கள் பற்றி பவ்ரல் தொடர்ச்சியான பல கலந்துரையாடல்களை நடாத்தியது. செப்டம்பர் தொடக்கம் நவம்பர் 2004 வரை கலந்துரையாடல்கள் நடைபெற்ற இக்காலப் பகுதியில் பங்குபற்றியோரால் மேற்கொள்ள வேண்டிய பல் வேறுபட்ட பொதுமக்கள் நடவடிக்கைகள் சிபார்சு செய்யப்பட்டதுடன் பின்னர் தேர்தற் சீர்திருத்தங்கள் மீதான பொதுமக்களின் அழுத்தத்தினை பிரயோகிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தேர்தற் சீர்திருத்தத்திற்கான தேவையினை வற்புறுத்தியும் அதனை அரசியற் தலைவர்களால் மேற்கொள்வதற்கு வற்புறுத்தும் வகையிலும் நாடளாவிய வலுவான விழிப்புணர்வு இயக்கம் ஒன்று நடாத்தப்பட்டது. பின்வரும் தேர்தற் சீர்திருத்தச் செய்முறையினை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் பங்குபற்றுநர்கள் ஈடுபட்டனர்.

- <u>தபாலட்டை இயக்கம்:</u> கலந்துரையாடலின் முடிவு ஒவ்வொன்றிலும் ஒழுங்கமைப்பாளர்கள், மிகவும் முக்கியமாக செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் என அவன்/அவள் கருதும் சீர்திருத்தத்தினைக் குறிப்பிட்டு ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித்தலைவருக்கு அனுப்பிவைக்குமாறு பங்குபற்றியோருக்கு ஆலோசனை வழங்கினர். தொடர் கலந்துரையாடல்களில் பங்குபற்றிய ஒவ்வொருவராலும் இது மேற்கொள்ளப்பட்டது. தபால் அட்டைகள் பவ்ரல் அமைப்பினால் வழங்கப்பட்டன.

- <u>கையெழுத்து இயக்கம்:</u> தேசிய மகாநாடு முடிவுற்றபின்னர் பவ்ரல் அமைப்பு மாவட்ட இணைப்பாளர்கள் மூலமாக, ஜனாதிபதி, பாராளுமன்ற அங்கத்தவர்கள் கட்சி அங்கத்தவர்கள் ஆகியோருக்கு மகஜர் ஒன்றை அனுப்புவதற்கான கையெழுத்து வேட்டைப் பிரச்சாரத்திற்கு பங்களிக்குமாறு உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டனர். இவ்வியக்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி வேண்டுகோளை அனுப்பிவைப்பதற்கு தங்கள் ஈடுபாட்டினை காட்டுவதாக பங்குபற்றிய குழுவினர் உறுதியளித்தனர்.

- <u>தூதுக்குழுக்களை அனுப்புதல்:</u> மாகாண மட்டத்திலான கலந்துரையாடலில் மூன்று தூதுக்குழுக்கள் முக்கியமான பாராளுமன்ற அங்கத் தவர்களை அவர்களின் மாகாணங்களில் சந்தித்து இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வெளிக்கொணரப்பட்ட தேர்தல் சீர்திருத்தத்திற்கான விதந்துரைகளை உள்ளடக்கிய பதிவுக்குறிப்பொன்றைக் கையளித்தனர். இதற்கான சந்திப்புக்கள் வடமாகாணத்தில் வவுனியாவில் ஒக்டோபர் 11 ஆம் திகதியிலும் தென்மாகாணத்தில் காலியில் நவம்பர் 12 ஆம் திகதியிலும் மேல் மாகாணத்தில் கம்பகாவில் நவம்பர் 12 ஆம் திகதியிலும் இடம்பெற்றன. இந்த குறிப்பானது கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் சுருக்கமான விபரத்தினையும் அத்துடன் அரசியல் கட்சிகள் பாராளுமன்றத்தில் இம்முன்மொழிவுகள் செயற்படுத்துவதற்கான வேண்டுகோளையும் உள்ளடக்கியிருந்தது, ஒவ்வொரு தூதுக்குழுவும் கலந்துரையாடலில் பங்கு கொண்ட 20-30 இடைப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. இக் குறிப்புக்கள் குறிப்பிட்ட பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட போது இதனை தமக்கு கிடைக்கும் முதற் சந்தர்பத்திலேயே தங்களின் அரசியற் கட்சிக்கு சமர்ப்பிப்பதாக உறுதியளித்தனர்.

- <u>வானொலி நிகழ்ச்சிகள்:</u> தேர்தற் சீர்திருத்தம் தொடர்பான விடயங்கள் அரச வானொலி அலைவரிசையில் இடம்பெறும் புகழ்பெற்ற 'சுபாரதி' நிகழ்ச்சியில் செப்டம்பர் - நவம்பர் 2004 காலப் பகுதியில் எட்டு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. தலைப்பினைப் பொறுத்து இவ் ஒரு மணித்தியால நிகழ்ச்சிகளில் சிரேஷ்ட அரசியல்வாதிகள், சிரேஷ்ட அரச அலுவலர்கள், சமயகுரவர்கள் சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர், சிவில் அமைப்பில் உள்ள பிரதான ஈடுபாடு கொண்டவர்கள் ஆகியோர் அடங்கியிருந்தனர். பொதுமக்களுக்கு வினாவிடையளிக்கத்தக்கதாக தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டன.

- தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்: அரசாங்கத்தின் சுயாதீன தொலைக்காட்சியில் 30 நிமிடத்தைக் கொண்ட இரு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. கலந்துரையாடப்பட்ட விடயங்களில் அடங்குவன.
  (அ) தேர்தலில் வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டையை கட்டாயமாக்கு சட்டவாக்கம் (ஆ) பெண்களின் பிரதிநிதித்துவம் உட்பட தேர்தற் சீர்திருத்தம் தொடர்பான பொது விடயங்கள். இக்கலந்துரையாடல்கள் ஒக்டோபர் 12, 19, 2004 திகதிகளில் நடாத்தப்பட்டன.

- விளம்பரங்கள் மூலமான பிரச்சாரம்: நிதாஸ், மீபூர ஆகிய மாத செய்தித்தாள்களில் தேர்தல் சீர்திருத்தத்திற்கான நான்கு ஆதரிக்கும் விளம்பரங்கள் செப்டம்பர், நவம்பர் 2004 காலப்பகுதியில் வெளியிடப்பட்டன.

- வினாக்கொத்து: தேர்தற் சீர்திருத்த இயக்கத்தில் எதிர்காலத்தில் ஈடுபடுதல் தொடர்பான வழங்கப்பட்ட வினாக்கொத்துக்கு அளிக்கப்பட்ட பதில்களிலிருந்து பங்குபற்றியோர் இதற்காக தாம் தொடர்ந்து வலுவான முறையில் ஈடுபடும் விருப்பத்தினை வெளியிட்டுள்ளனர். அவர்கள் எவ்வகையில் இதற்குப் பங்களிப்புச் செய்யமுடியும் என்பதனையும் தெரிவித்தனர். இது தொடர்பான பிரச்சாரக் குழுக்களில் பங்குபற்றல்: இவை தொடர்பான செயற்பாடுகளுக்கு நிதி பங்களிப்பு செய்வோர்: ஏனையோரை இயக்கத்தில் இணைவதற்கு திரட்டுவோர் மற்றும் இந் நிகழ்ச்சித்திட்டம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவோர். மொத்தமாக பங்குபற்றிய 12 மாவட்ட மட்டத்திலான கலந்துரையாடல்களிலும் 4 மாகாண மட்டத்திலான கலந்துரையாடல்களிலும் மொத்தமாகப் பங்குபற்றிய 623 பங்குபற்றுநர்கள் 423 பேர் (64 சதவீதம்) தாங்கள் ஆகக்குறைந்தது ஏதாவது ஒரு வழியில் தாங்கள் குறிப்பிட்டவாறு இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றுவதாக குறிப்பிட்டுள்ளனர் பங்குபற்றியோரில் பலர் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் பங்களிப்பதாக கூறியுள்ளனர்.

| பங்களிக்கும் வழிவகை | பங்களிக்க விரும்புவோர் எண்ணிக்கை |
|---|---|
| பிரச்சார குழுவில் பங்கெடுத்தல் | 234 |
| நிதியுதவி வழங்கல் | 85 |
| சமூக அணிதிரட்டல் | 221 |
| நிகழ்ச்சித் திட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல் | 235 |

*எதிர்காலப் பிரச்சார உபாயங்கள்*

கலந்தாலோசனை மூலமாக ஆரம்பிக்கப்பட்ட முன்முயற்சிக்கு மேலதிகமாக தேர்தற் சீர்திருத்தத்திற்கான எதிர்கால முயற்சிகளையும் உபாயங்களையும் பங்குபற்றியோர் விருத்தி செய்துள்ளனர். பொதுசன அபிப்பிராயத்தினை உருவாக்கும் வகையில் பரந்தளவில் கலந்துரையாடல்களை நடாத்துவதற்கான இயக்கத்திற்கு பங்குபற்றியோர் சாதகமாக இருந்தனர் நாடுதழுவிய விழிப்புணர்வு இயக்கத்தினை ஏற்படுத்துவதற்குப் பின்வரும் ஆலோசனைகள் ஒழுங்கமைக்கப்பட்டன.

1. சீர்திருத்தத்திற்கு ஆதரவு தெரிவிப்பதில் சகல அரசியற் கட்சிகளிலிருந்து உள்ளூர் அரசியல் வாதிகளை ஈடுபடுத்தல், ஒவ்வொரு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை நெருக்கமாக கண்காணிப்பதுடன் குறிப்பிட்ட இடத்திற்குரிய சிவில் சமூக குழுவினர் தேர்தற் சீர்திருத்தற்கான தேவையை பரந்த அரசியற் தளத்தை பிரதிபலிக்கும் வகையில் உள்ளூர் அரசியல் வாதிகள் பங்குபற்ற கலந்துரையாடலில் ஈடுபடும் வகையில் ஒழுங்கு செய்தல் பரந்தளவிலான வேறுபட்ட பிரஜைகள் குழுக்கள் இத்தகைய கலந்துரையாடலில் பிரதிநிதித்துவம் செய்யப்பட வேண்டும். இதில் உள்ளூர் சமய தலைவர்கள், துறைசார் நிபுணர்கள், சமுதாயத்தலைவர்கள் மற்றும் சிரேஷ்ட பிரஜைகள் அடங்குவர்.

2. உள்ளூர் மட்டத்தில் கைகோர்க்கும் மனித சங்கிலிகளில் ஆரம்பித்து அதன் பின்னர் உப தேசியமட்டத்திலும் தேசிய மட்டத்திலும் தேர்தற் சீர்திருத்தற்கான விருப்பத்தினை எடுத்துக்காட்ட வேண்டும். 2001 இல் எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்திற்கும் அரசிற்கும் இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட உதவிய வெற்றிகரமாக நடாத்தப்பட்ட பிரச்சார இயக்கத்தின் அடிப்படையிலானதாக இந்த விதப்புரை அமைந்தது.

3. உள்ளூர் மட்டத்தில் நன்கு விளம்பரப்படுத்தப்பட்ட கையெழுத்து வேட்டை இயக்கம் (மனுக்கள்) மேற்கொள்ளப்பட வேண்டும். கையொப்பங்களை உள்ளடக்கிய பிரதிகள் பின்னர் அமைதியான ஊர்வலமாகச் சென்று சகல அரசியற் கட்சிகளைச் சேர்ந்த உள்ளூர் அரசியல்வாதிகளிடம் கையளிக்கப்பட வேண்டும். இதனது பிரதிகள் கொழும்பிலுள்ள கட்சித்தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சனாதிபதிக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

4. இவ்வியக்கம் இடம்பெறும் காலப்பகுதியில் ஒவ்வோர் வாரமும் தேர்தல் சீர்திருத்தம் தொடர்பாக மூன்று கல்வியாளர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள் புதினப்பத்திரிகைகளில் மூன்று மொழிகளிலும் பிரசுரிக்கப்படல் வேண்டும்.

5. சுவரொட்டி இயக்கம், கைச்சுசுவரொட்டிகள் போன்ற பிரச்சார உத்தி விளம்பரங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6. முன்பு தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் நாடாத்தப்பட்ட தேர்தற் சீர்திருத்தம் தொடர்பான நிகழ்ச்சிகளை மாதிரியாகக் கொண்டு கலந்துரையாடல்கள், செய்தி மகாநாடுகள் ஆகிய இலத்திரனியல் ஊடக நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாகாணங்களிலுள்ள பெரும்பாலான சிவில் சமூக நிறுவனங்கள் விதந்துரைக்கப்பட்ட செயற்பாடுகளை கையாளும் திறனைக் கொண்டிருக்கவில்லை என பங்குபற்றியோர் தங்கள் கருத்தினை தெரிவித்தனர். ஆகையால் நன்கு தாபிக்கப்பட்ட தேசிய மட்டத்திலான சிவில் சமூகம் அவசியமான திறனையும் நிபுணத்துவத்தினையும் வழங்கும் வகையில் தேவைப்படும் நிதிகள், வள ஆளணியினர் மற்றும் ஏனைய தேவைகளான மாவட்டரீதியில் செயற்படுத்துவதற்காக நிறுவனத்திற்காக அச்சிடப்பட்ட பொருடகள் ஆகியனவற்றை வழங்க உதவுதல் வேண்டும். ஊடகத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள், போன்றவை தலை நகரத்தினைச் சூழவுள்ள தாபனங்கள் மூலமாக ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

## முடிவுரை

இவ்வறிக்கையானது தேர்தல் சீர்திருத்த தொடர்பான கலந்துரையாடலில் மிகவும் முனைப்பான விதந்துரைகளைச் சுட்டிக்காட்டுகிறது. விதந்துரைகளைப் பொறுத்தவரையில் குழுக்கள் சிலவற்றில் வேறுபட்ட போதிலும் சீர்திருத்தத்திற்கான தேவையைக் கருதி உடன்பாடு தெரிவித்துள்ளனர். ஆகக் குறைந்தது இங்கு இனங்காணப்பட்ட விடயங்கள் தேர்தற் சீர்திருத்தம் தொடர்பான எதுவிதமான எதிர்கால கலந்துரையாடலிலும் கருதப்பட வேண்டியனவாகும்..

வட்டமேசைக் கலந்துரையாடல்கள் மூலமாக உருவாக்கப்பட்ட சீர்திருத்ததிற்கான திட்டங்கள் மேலும் விஸ்தாரமான கலந்துரையாடல்களையும் நடைமுறைப்படுத்தலையும் உறுதிப்படுத்தும் வகையில் விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். சீர்திருத்த விடயங்களைத் தொடர்வதற்கான இயக்க நடவடிக்கைகளை ஆதரிக்கும் முயற்சியில் உள்ளூர் அரசியல் வாதிகளைச் சம்பந்தப்படுத்தல், நன்கு விளம்பரப்படுத்தப்பட்ட மனுக்கள் இயக்கம், இது தொடர்பான தகவலளிக்கும் விபரக்கொத்துக்களை புழக்கத்திற்கு விடல், ஊடகக் கலந்துரையாடல்கள், மற்றும் பிரஜைகளின் விளக்கங்கள் ஆகியன உள்ளடக்கப்பட வேண்டும்.

பரந்தளவிலான இணைந்து தயாரித்த பிரச்சார இயக்கம் தேர்தல் விடயங்கள் சீர்திருத்தங்கள் செயற்படுத்தப்படும் வரை அவற்றை முன்னரங்க விடயமாக வைத்திருக்கும்.

இந்த அறிக்கை எவ்வாறு நியாயமான தேர்தல் முறைமையை விருத்தி செய்ய முடியும் என்ற வினாவுக்கு விடையளிக்கமாட்டாது. இது மாற்றத்திற்கான முக்கிய ஆலோசனைகளையும் மேலும் அதனைச் செயற் படுத்துவதற்கான தொடருகின்ற செயற்பாட்டு உபாயங்களையே வழங்குகின்றது.

தேர்தற் சீர்திருத்தம் தொடர்பான அடுத்த நடவடிக்கை ஜனநாயகத்தின் பங்கு தாரர்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும். வரைவிலக்கணப்படி இது இலங்கையின் சகல பிரஜைகளையும் உள்ளடக்குகின்றது. இந்த முக்கிய விடயம் தொடர்பான மக்கள் வலுவான ஈடுபாட்டினை- இலங்கைப் பிரஜைகள் தொடர்ந்தும் வெளிக்காட்டி விடுகின்றனர். கலந்துரையாடலை அடிப்படையாகக் கொண்ட இந்த அறிக்கையானது மக்களுக்கு பிரதியிடும் கருவியாக இருப்பது மாத்திரமன்றி தேர்தற் சீர்திருத்தத்திற்கான இயக்கம் பிரஜைகளால் உந்தப்படும் திறன்வாய்ந்த ஊக்க சக்தியாக விளங்கும் எனவும் நம்புகிறோம்.